மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மொத்தம் 156 ரிட்டுகள் போடப்பட்டன. 121 ரிட்டுகள் முடிவடைந்து விட்டன. இவற்றில் 15 ரிட்டுகள் அரசாங்கத்திற்கு எதிராகவும், மற்ற ரிட்டுகள் அரசாங்கத்திற்குச் சாதகமாகவும் முடிந்துள்ளன. 35 ரிட்டுகளில் இன்னும் முடிவு காணவில்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த அரசுக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்ட 15 ரிட்டுகளில் என்னென்ன பிரச்சினைகளில் ஆசிரியர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகியிருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றி முழு விவரம் இல்லை. இந்த "ரிட்"கள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக ஆராயவேண்டும். 15 "ரிட்டு"களின் முழு விவரங்கள் சொல்லுவது என்பது முடியாது. தனிக் கேள்வி போட்டால், முழு விவரங்கள் தரமுடியும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இந்த "ரிட்"டுகளை அதிகமாகப் போட்டிருக்கிறார்களா அல்லது ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள் அதிகமாகப் போட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பொதுவாக கல்வித் துறையை எதிர்த்து போடப்பட்ட "ரிட்"கள் என்ற முறையில் தான் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கவில்லை.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்த "ரிட்டு"களில் கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து மட்டும் எத்தனை "ரிட்டு"கள் என்பதைச் சொல்ல முடியுமா? அவைகளில் அரசுக்கு எதிராக எத்தனை "ரிட்டு"களில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஜில்லா வாரியாகப் பிரித்துப் பார்க்கப்படவில்லை. தனிக்கேள்வி போட்டால், ஜில்லா வாரியாக உள்ள விவரங்களைக் கொடுக்க முடியும்.

Formation of an "Open" University.

* 202. *Q.*—Thiru C. V. RAJAGOPAL (on behalf of Thiru K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education be pleased to state whether the Government are considering the formation of an "Open" University on the lines of the one functioning in the United Kingdom ?

1973 டிசம்பர் 5]

"திறந்தவெளிப்" பல்கலைக் கழகம் ஏற்படுத்துதல்.

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இங்கிலாந்தில் செயல்பட்டு வரும் புல்கலைக் கழகத்தின் அடிப்படையில் இங்கு "திறந்தவெளி"ப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசிலனை செய்து வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநில அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வில்லை. பல்கலைக் கழக மான்யக் குழுவைக் கலந்துகொண்டு, இத்தகைய திட்டத்தை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது என்று அறியப்படுகிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்திய நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலாவது இத்தகைய திறந்தவெளிப் பல்கலைக் கழகங்கள் நடத்துவதற்கு முயற்சி இருக்கிறதா, அப்படி எங்கேனும் ஏற்படுத்தியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றிய செயற்குறிப்பு சென்னைப் பல்கலைக் கழகத்திடமிருந்தோ, கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்தோ வந்ததாகத் தெரியவில்லை. இந்திய அரசின் பல்கலைக் கழக மானியக் குழுவோடு கலந்து ஆலோசனை செய்கின்ற ஒரு நிலை இருக்கிறது. எந்த மாநிலங்களிலும் இதுவரையிலும் இது நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, ரவீந்திரநாத் தாகூர் ஏற்படுத்திய சாந்திநிகேதன் போன்ற நிறுவனத்தில் இது போன்ற நிலையில் எப்படி கல்லூரிகளை நடத்துகிறார்கள் என்பதை அரசு அறியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எனக்கு அதுபற்றிய முழு விவரங்கள் தெரியவில்லை. முழு விவரங்கள் கேட்டால், அதைப்பற்றிய விவரங்களை வரவழைத்துத் தான் நாம் ஆராய வேண்டும்.

Selection Grade Scale of Pay.

*@ 191. *Q.*—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Secondary Grade trained teachers serving in Government (Board) High Schools in the Chingleput District have not yet been sanctioned Selection Grade Scales of pay; and

(*b*) if so, the reasons therefor ?

@4—12—1973 நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.